1979 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(இ) தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்

தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள கூட்டுறவுப் பண்டகசாலையின் பிரச்சனையை அரசு தீர்த்து வைக்காத காரணத்தால் தொழிற் சங்கங்களும் அரசியல் கட்சிகளும் எடுத்துள்ள போராட்ட நடவடிக்கையால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டு திரு. க. சுப்பு, திரு. சி. ஆறுமுகம் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, புதிய தூத்துக்குடி துறைமுகத்திலுள்ள கூட்டுறவு பண்டகசாலையில் நடந்துள்ள சில முறைகேடுகள் குறித்து ஏற்கனவே இந்த அரசாங்கத்திற்குச் சில தகவல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 18-1-1978 முதல் அப்படிப்பட்ட புகார்களை அங்கே இருக்கக்கூடிய தொழிற்சங்கமே கொடுத்திருக்கிறது.

[முற்பகல் 11-40]

மற்றவர்களும் சொல்லியிருக்கிறார்கள். அதை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தூத்துக்குடி சென்றிருந்த நேரத்திலும் அவர்கள் இடத்திலும் முறையீடுகள் சொல்லப்பட்டன, மனுக்கள் கொடுக்கப்பட்டன. அதை அவர்கள் நல்ல முறையிலே கவனித்து அந்த நிர்வாகத்தை கலைத்து விட்டு ஸ்பெஷல் ஆபீசரை போட்டு, நல்ல முறையில் நிர்வாகம் நடக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது நல்ல காரியம் தான். இது வரவேற்க வேண்டிய விஷயம் தான்—வரவேற்கிறேன்.

ஆனால், ஸ்பெஷல் ஆபீசரை போட்டு நிர்வாகத்தை மாற்றியிருக்கிறார்களே தவிர அந்தச்சங்க செயலராளர் அருணாசலம்—அவர் ஒரு டிரைவர்—செய்திருக்கிற ஊழல்களின்மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. சுமார் 1 லட்சம் ரூபாய் அளவிற்கு

நஷ்டம் வருகிறது என்று சொல்லப்பட்டது. அந்த டிரைவர் அருணாசலம் செயலாளராக இருந்தபோது, போக்குவரத்துச் செலவு, அந்தச் செலவு, இந்தச் செலவு என்று ஏகப்பட்ட செலவு களை ஏற்படுத்தி, நிறைய ஊழல்களையும் செய்து இந்த நஷ்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார். இதற்கு ஏன் அவர் மீது நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறேன்? சில அதிகாரி கள் அவர்மேல் குறிப்பிட்ட ஊழல் புகார்கள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாமலேயே இருக்கின்றன. ஸ்பெஷல் ஆபீசரைப் போட்டதோடு சரி. அந்த லட்ச ரூபாய் நஷ்டம் ஏற்பட்டதைப் பற்றி ஏன் ஏற்பட்டது? அதற்கு யார் காரணம் என்றெல்லாம் விசாரிக்க வேண்டாம்? காரணமானவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டாமா? இங்கேயிருந்து கூட்டுற வுத் துறை அதிகாரி ஒருவர் சென்றிருக்கிறார். விசாரணைக்கு. ஆனால் அவரை ஆட்கள் வைத்து அடித்து துரத்தியிருக்கிறார் இந்த அருணாசலம்.

அவர் மீது 11 புகார்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒன் றிரண்டு மட்டும் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நீங்கள் அனுப்பிய அதிகாரியையே துரத்தி அடித்து அனுப்பி விட்டார்களே. இதற்கு என்ன காரணம் என்றால், அங்கே இருக்கக்கூடிய செல்லமுத்து என்னும் இன்ஸ்பெக்டர் இவருக்கு நெருங்கிய நண்பர். அதனால் அவர் மீது வரும் வழக்குகளை பதிவு செய்வதில்லை என்பது மட்டுமல்ல. யார், யார் அவர்மீது வழக்குகள் கொண்டு வருகிறார்களோ அவர்கள் மீதே, இவர் வேறு ஏதாவது வழக்கு பதிவு செய்து விடுகிறார். இந்தச் செல்லமுத்து என்பவர் அங்கே 6 வருஷமாக இருக்கிறார். 3 வருஷம் சப்இன்ஸ்பெக்டராக இருந்தார். 3 வருஷம் பிரமோஷன் ஆன பிறகு இருந்துக்கொண்டிருக்கிறார். அவர் தான் அங்கு தேவை என்று அவரை மாற்றாமல் வைத்திருக்கிறார்கள் போல் இருக் கிறது. அவர் இந்த பண்டக செயலாளரைப் பற்றி யாராவது புகார் சொல்கிறார் என்று தெரிந்தால், அவர் மீது வழக்குப் போட்டுவிடுகிறார்.

திரு. பிரிட்டோ, திரு. மகாலிங்கம், திரு. ஜோசப் என்ற மூன்று பேர்கள் அவர்கள்மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற சங்கச் செயலாளர்கள். இவர்கள் டிரைவர் அருணாசலத்தின் மீது புகார்கள் கொடுத்திருக்கிறார்கள் என்பதால், இந்த மூன்று பேர்கள் மீதும் வழக்குகள் பதிவு செய்து — அதுவும் கிரிமினல் வழக்குகள் செக்ஷன் 147, 448, 406, 506 இவைகளின் கீழ் கிரிமினல் சார்ஜ் போட்டு அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட் டுள்ளனர். அவர்கள் 14 ஆண்டுகள் காலமாக பதிவுபெற்ற மத்தி அரசின் அனுமதி பெற்ற தொழிற் சங்கத் தலைவர்கள்— அவயள் மீது இப்படி தவறான வழக்குகள் பதிவு செய்யப் பட்டிக்கிறது

1979 மார்ச் 27] [திரு. க. சுப்பு]

முதலிலேயே 1 இலட்சம் நஷ்டம் வர வேண்டிய காரணம் என்ன? இதற்கு யார் பொறுப்பு என்று பார்த்து நடவடிக்கைகள் எடுத்திருந்தால் இப்படி மக்கள் போராடித்தான் ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டிருக்காது. அதை அப்படி முடிவிற்கு கொண்டுவராத காரணத்தினால், போராடித்தான் ஆக வேண்டும் என்ற நிலை ஏற்பட்டு, 1979 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 4-ந் தேதி அன்று ஊர்வலம் தொடங்கி போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். இப்பொழுது கூட அமைச்சர் அவர்கள், இந்த ஊழல்களுக்கு விசாரணைகள் நடத்துவதாக இருந்தால், அதற்கு யார் காரணம், எப்படி நடைபெற்றது? அவர்களை தண்டிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று விசாரணைகள் நடத்தி முடிவு எடுப்பதாக அறிவித்தால்; பொதுமக்களுக்கும் இந்தப் போராட்டத்தை தொடர்ந்து நடத்த வேண்டிய அவசியம் இருக்காது எனக்கும் சரி— அவர்கள் உறுதி மொழி கொடுத்தால் ஏற்றுக் கொள்கிறேன், ஒத்தி வைக்க வேண்டும் என்று கூட அவசியம் இல்லை.

ஆகையால், தூத்துக்குடி துறைமுகம் பண்டக சாலையில் திரு. அருணாசலம் என்பவரால் ஏற்பட்ட ஊழல்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இன்ஸ்பெக்டர் ஆப் போலீஸ் செல்லமுத்து அவர்களின் நடவடிக்கைகள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும், மேலும் இதிலே பிரச்னைகளை குறித்து விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வழக்கம்போல் ஒத்தி வைக்கத் தேவையில்லை என்று தீர்ப்பளிக்காமல், அமைச்சர் அவர்கள் அதற்கான விளக்கத்தை சரியாக கொடுக்காவிட்டால், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் தூத்துக்குடி துறைமுக கூட்டுறவு சாலை சம்பந்தமாக சில விவரங்களை கவனப்படுத்தினார்கள். சென்ற ஆண்டு அதாவது ஒரு 10 மாதங்களுக்கு முன்பு, நான் தூத்துக்குடி சென்று இருந்த நேரத்தில் சம்பந்தப்பட்டவர்கள் என்னிடத்தில் வந்து அங்கே குறைபாடுகள், முறைகேடுகள் இருக்கின்றன என்று மனுவைக் கொடுத்தார்கள். அந்த மனுவை உடனடியாக விரைந்து பரிசீலனை செய்து அங்கே குறைபாடுகள் இருக்கின்றன என்று உணர்ந்து, கடந்த 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட்டு திங்கள் 28- ம் நாள் அந்தக் கூட்டுறவு பண்டகசாலையின் நிர்வாகம் கலைக்கப்பட்டு, தனி அதிகாரியின் பொருப்பில் அந்தக் குறைபாடுகளை நிவர்த்திக்கும் வகையில் அந்த நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது.

[திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி] [1979 மார்ச் 27

இதற்கிடையில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் சில விவரங்களைச் சொன்னார்கள். ஏதோ கூட்டுறவுத் துறை பிரிட்டோ, மகாலிங்கம், ஜோசப் போன்ற நண்பர்கள் மீது போலீஸ் வழக்கு தொடர்ந்து இருப்பதாக சொன்னார்கள். அதற்கும் கூட்டுறவுத் துறைக்கும் சம்பந்தம் இல்லை. ஏற்கனவே அவர்கள் மீது அருணாசலம் வழக்கைத் தொடர்ந்து இருக்கிறார்கள். அவர்மீது இவர்கள் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்கள். ஆகவே, இரண்டு வழக்குகளும் தனித்தனியாக தூத்துக்குடியில் இருக்கும் எஸ்.டி.எம். கோர்ட்டில் நடை பெற்றுக்கொண்டு இருக்கிறது. இதற்கும் கூட்டுறவுத் துறைக்கும் நிச்சயமாக தொடர்போ சம்பந்தமோ கிடையாது. ஆனால் மாண்புமிகு சுப்பு அவர்கள் சொன்னதைப்போல அங்கே சில குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளில் கடந்த 6 மாத காலத்தில் சில குறைபாடுகளை நிவர்த்தி செய்து இருக்கிறோம். இப்போதும் 65-வது விதியின் கீழ் மேலும் இன்று நிகழ்ந்து கொண்டு இருக்கும் குறைபாடுகளை நீக்குவதற்கு முனைந்து கொண்டு இருக்கிறோம். விரைவிலே அந்தக் குறைபாடுகள் நீக்கப்பட்டு அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் நிச்சயமாக அந்தக் கூட்டுறவு ஸ்தாபனத்தை நிர்வகிக்கும் பொறுப்புக்கு வருவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் சொன்னதைப்போல், அருணாசலம் ஜனதா கட்சியைச் சேர்ந்தவர், அதே போல் இங்கே உறுப்பினர் சுப்பு அவர்கள் குறிப்பிட்டதைப் போல், பிரிட்டோ திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அங்கேயிருக்கும் பிரச்னை இரண்டு தொழிற் சங்கங்களுக்கும் மத்தியில் இருக்கும் போராட்டமே தவிர பிரச்சனை வேறல்ல என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். என்றாலும் கூட அவர்கள் சொல்லியதைப் போல இன்று தூத்துக்குடி துறைமுகப் பகுதியில் பதட்டமோ அல்லது வேறு விதமான கிளர்ச்சியோ இல்லை, அமைதிக்கு குந்தகம் ஏற்படும் வகையில் எந்தக் கிளர்ச்சியும் இல்லை, நிலைமைக் கட்டுக்கோப்பாக இருக்கிறது என்று சொல்லிக்கொண்டு கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில், துறைமுகத்தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டகசாலையில் இருக்கும் குறைபாடுகளைப் போக்குவதற்கு கூட்டுறவுச் சட்டத்தின் 65-வது பிரிவின் படி நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகிறோம், விரைந்து அதைத் தீர்ப்பதற்கு முயல்வோம் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, இந்த மாமன்றத்தின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

1979 மார்ச் 27]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

(ஈ) மின்வெட்டு காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பெறுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தமிழ்நாட்டின் பல பகுதிகளில் மின்வெட்டு காரணமாக மின்சார மோட்டார்களில் காயில் தீய்ந்து நீர் இறைக்க முடியாமல் போனதினாலும், அதனால் பயிர்கள் காய்ந்து விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளதால் இருக்கும் பதட்ட நிலை குறித்து வ்வாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு....

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், மு. அம்பிகாபதி, எஸ். சிவசாமி, சி. கோவிந்தராசன், வீ. கே. கோதண்டராமன், கு. ரமணி, ஆர். கிருஷ்ணன், எஸ். ஜே. சாதிக் பாட்சா, ஆ. நடராசன், துரை முத்துசாமி, ராஜ்குமார் விஜய ரெகுநாத தொண்டைமான், ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : நான் கூட காலையில் பேரவைத் தலைவரிடம் கொடுத்து இருக்கிறேன். அவரும் உடனே அட்மிஷன் போட்டு இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சரி, திரு. திருவேங்கடம் அவர்களும் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்....

[முற்பகல் 11-50]

*திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் மின்வெட்டு சம்பந்தமாகவும், கெரோசின் தட்டுப்பாடு சம்பந்தமாகவும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். மின்வெட்டு சம்பந்தமாக உள்ளதை மட்டும் இப்போது எடுத்திருக்கிறார்கள்,